**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் ஒரு அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம் – உணவூட்டுச் செலவினம் – நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/–லிருந்து ரூ.42/– ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.21.66–லிருந்து ரூ.37/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.09** **நாள் 03.02.2015**

**ஜய–தை 20, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.52, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 09.03.2010.
2. அரசாணை (நிலை) எண்.30, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள்25.03.2013.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.2637/மஇநிர்(3)/2012, நாள் 08.11.2012.

––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் ஒரு அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கத்தில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு பெரியவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த உணவூட்டுச் செலவினத்தை ரூ.20/–லிருந்து ரூ.25/– ஆக உயர்த்தியும், அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், சிறியவர்களுக்கான உணவூட்டுச் செலவினம் நாள் ஒன்றுக்கு ரூ.15/–லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.650/– (அதாவது நாள் ஒன்றுக்கு ரூ.21.66) ரூ.21.66 ஆக உயர்த்தி வழங்கியும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் தயாரிக்க, எரிவாயு உருளைகள் அனைத்தும் மத்திய அரசு வழங்கும் மானியத்தால் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், தற்போது, மானிய விலையில் எரிவாயு உருளைகள் வழங்க இயலாது என எரிவாயு நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், தேவைப்படும் எரிவாயு உருளைகளை அரசு மானியம் இன்றி வணிக விலையில் அவ்வப்போது ஏற்படும் விலை உயர்வில் கொள்முதல் செய்யப்பட வேண்டும் எனவும், இதனால் எரிவாயு உருளைகள் வாங்க கூடுதல் செலவினம் ஏற்படுவதாகவும், இதனால், இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உணவூட்டுச் செலவினம் அதிகமாவதுடன், ஒரு இல்லவாசிக்கு ஒரு நாளைக்கு ரூ.25/– க்குள் செலவினம் மேற்கொள்ள

**[த.பி.பா]**

இயலவில்லை எனவும், காய்கறி, பால், மளிகை பொருட்கள் ஆகியவற்றின் விலை உயர்வினை கருத்திற்கொண்டு மேற்படி இல்லவாசிகளுக்கான உணவூட்டுச் செலவினத்தை பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.50/– என உயர்த்தி வழங்கப்படவேண்டும் என்றும், சிறியவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.40/– ஆக உயர்த்தி வழங்கலாம் என்றும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**3.** மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரையினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் 1 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள இல்லவாசிகளின் உணவூட்டுச் செலவினம், நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/–லிருந்து ரூ.42/– ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.21.66–லிருந்து ரூ.37/– ஆக கீழ்க்கண்ட விவரப்படி உயர்த்தியும், இத்திட்டத்திற்கு, இந்நிதியாண்டில், ஜனவரி 2015 முதல் மார்ச் 2015 வரையிலான மூன்று மாதங்களுக்கு மட்டும் ரூ.46,31,940/– (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து முப்பத்தொன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| | | | | |
|---|---|---|---|---|
| **10 அரசு மறுவாழ்வு இல்லங்கள்** | | | | |
| i | பெரியவர்கள் 1119 x ரூ.42/– x 30 நாட்கள் x 3 மாதங்கள் | = | ரூ.42,29,820/– | **ரூ.44,42,940/–** |
| ii | சிறுவர்கள் 64 x ரூ.37/– x 30 நாட்கள் x 3 மாதங்கள் | = | ரூ.2,13,120/– | |
| **அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்** | | | | |
| i | சராசரியாக 50 பயனாளிகள் உள்ளதால் ஆகும் செலவினம் = 50 x ரூ.42/– x 30 x 3 மாதங்கள் | = | ரூ.1,89,000/– | **ரூ.1,89,000/–** |
| | **மொத்தச் செலவு** | | | **ரூ.46,31,940/–** |

**4.** மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| i) | **2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூகநலன் -104 முதியோர் இயலாமையுற்றோர், ஆதரவற்றோர் நலன்- I-திட்டத்தில் சேராதது AI தொழுநோய் பிச்சைகாரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் - 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 ஏனையவை (த.தொ.கு .2235-02-104-AI – 6796)** | ரூ.44,42,940/– |
| ii) | **2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூகநலன் -104முதியோர் இயலாமையுற்றோர், ஆதரவற்றோர் நலன்- I-திட்டத்தில் சேராதது AL மேல்பாக்கத்தில் பாதுகாப்பு இல்லமும், காஞ்சிபுரத்தில் சிறப்பு இல்லமும் - 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை (த.தொ.கு..2235-02-104-AL – 6790)** | ரூ.1,89,000/– |

**5.** இது ஒரு “புது துணைப்பணி” (New Insturment of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்ப்பார்த்து, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–I) துறையால் தனியே

**[த.பி.பா]**

வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, **2015–16** ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.**2435**/நிதி(சந)/**2015**, நாள் **23.01.2015**–ன்படி, கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.**1696** (ஆயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஆறு)–ன் கீழ் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78**.
மாநிலக் கணக்காயர், சென்னை–**18**.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–**35**.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**
மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சஉதி) அலுவலகம், சென்னை–**9**.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–**9**.
நிதித் (ச.ந/வ.செ.பொது–I/வ.செ.பொது. II) துறை, சென்னை–**9**.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–**9**.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–**9**.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.